RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 248 | செப்டம்பர் 12, 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# முதல்வர் விஜயின் பிரிட்டன் பயணம் ஏன்?.. தமிழக அரசு விளக்கம்

சென்னை: செப்.12-

'தொழில் உறவுகளை வலுப்படுத்துவதும், ஏற்கனவே உள்ள நிறுவனங்களின் செயல்பாடுகளை விரிவுப்படுத்துவதும், முதல்வர் விஜயின் பிரிட்டன் பயணத்தின் முக்கிய நோக்கங்கள்' என, தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கை: த.வெ.க., அரசு பொறுப்பேற்று, 100 நாட்களான நிலையில், முதலீட்டாளர்கள் மாநாடு வாயிலாக, ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கும், அதிகமான முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்கள், 8,491 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீட்டு திட்டங்களை முன்வைத்துள்ளன. அவற்றின் வாயிலாக, 5,690 பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



பிரிட்டனை சேர்ந்த நிறுவனங்கள், நீண்ட காலமாகவே தமிழகத்தில், பொறியியல், நிதி சேவைகள் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில், குறிப்பிடத்தக்க அளவில் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் பல நிறுவனங்கள், தமிழகத்தில் உற்பத்தி ஆலைகளையும், உலகளாவிய திறன் மையங்களையும் நிறுவி செயல்பட்டு வருகின்றன.

இத்தகைய உறவுகளை வலுப்படுத்துவதும், ஏற்கனவே உள்ள நிறுவனங்களின் செயல்பாடுகளை விரிவுப்படுத்துவதும், முதல்வர் விஜயின் பிரிட்டன் பயணத்தின் முக்கிய நோக்கங்களாகும். இதன் வாயிலாக, தமிழகத்தில் உயர்தர வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வாய்ப்புகள் ஏற்படும். மேலும், 'உலகத்தரம் வாய்ந்த, மோட்டார் ஸ்போர்ட்ஸ் நகரம் அமைக்கப்படும்' என, முதல்வர் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பை முன்னெடுத்து செல்லும் வகையில், உலகின் முன்னனி மோட்டார் ஸ்போர்ட்ஸ் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை, நேரில் பார்வையிட்டு, சிறந்த நடைமுறைகளை அறிந்து கொள்வது பயனுள்ளதாக இருக்கும். இதற்காக, 'சில்வர் ஸ்டோன் மோட்டார் ரேசிங் சர்க்யூட்' போட்டியை, முதல்வர் பார்வையிட திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக முதல்வர் விஜய் தலைமையிலான குழு, சென்னையில் இருந்து நேற்று புறப்பட்டது. இக்குழு 17ம் தேதி மீண்டும் சென்னை திரும்ப உள்ளது. இக்குழுவில் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, தொழில்துறை வழிகாட்டி நிறுவன இயக்குனர் தீபக் ஜேக்கப் மற்றும் அரசு அலுவலர்கள் இடம் பெற்றுள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## "5 ஆண்டு கால ஆட்சியில் அனைத்து கோயில்களும் புதுப்பிக்கப்படும்" - அமைச்சர் ரமேஷ்

கும்பகோணம்: செப்.12-

"தமிழக முதல்வர் விஜய்யின் 5 ஆண்டு கால ஆட்சியில் தமிழகத்தில் உள்ள அனைத்து கோயில்களும் புதுப்பிக்கப்பட்டு, பக்தர்கள் தரிசனம் செய்யும் வகையில் நல்ல சூழ்நிலையை உருவாக்கி தருவோம்" என அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் தெரிவித்துள்ளார்.



கும்பகோணத்தில் மகாமக பெருவிழா முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசனை கூட்டம் மற்றும் விழா தொடர்பான கோயில்கள், குளங்கள் உள்ளிட்டவை நேற்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து 2-வது நாளாக இன்று மீதம் உள்ள கோயில்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்து பட்டீஸ்வரம் தேனுபுரீஸ்வரர் கோயிலில் ஆய்வு மேற்கொண்ட அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: "கும்பகோணத்தில் நடைபெற உள்ள மகாமக விழாவை முதல்வர் சிறப்பாக நடத்த வேண்டும் அறிவுறுத்தியுள்ளார்.

மகாமகம் தொடர்புடைய 12 சைவ, 5 வைணவ மற்றும் பட்டீஸ்வரம், சுவாமி மலை உள்ளிட்ட சிறப்பு பெற்ற கோயில்களில் என்ன மாதிரியான திருப்பணி செய்ய வேண்டும் என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளோம்.

இங்குள்ள கோயில்களைப் பார்க்கும்போது, கடந்த ஆட்சியாளர்கள், கடந்த 5 ஆண்டுகளில் அப்படி இப்படி பண்ணியிருக்கேன் என்று சொன்னார்கள். ஆனால் கோயில்கள் அனைத்தும் மிகவும் மோசமாக உள்ளது. நாகேஸ்வரன் கோயிலுக்குள் சென்றால், அந்தக் கோயிலில் கழிவுநீர் செல்ல போதிய வசதி இல்லை. துர்நாற்றம் வீசுகின்றது. அனைத்து அதிகாரிகளும் கடந்த 5 ஆண்டுகளாக கோயில் நிர்வாகத்துக்கு ஒத்துழைப்பு வழங்காததால் அப்படி உள்ளன. கோயில்களை சீரமைக்கவில்லை, போதிய அடிப்படை வசதியே இல்லாமல் உள்ளது. இதையெல்லாம் சரிசெய்ய வேண்டும் என திட்ட மதிப்பீடு போடப்பட்டு பணிகள் தொடங்க அதிகாரிகளிடம் அறிவுறுத்தியுள்ளோம்.

இதே போல் சுவாமிமலை முருகன் கோயிலில் இருளடைந்து காணப்படுகிறது. கடந்த 5 ஆண்டுகளாக ஆட்சியாளர்கள், அறநிலையத் துறை அமைச்சர் என்ன செய்து கொண்டிருந்தார் எனத் தெரியவில்லை. ஆனால் கடந்த ஆட்சியாளர்கள், தமிழகத்திலேயே திமுக தான் கோயில்களில் திருப்பணி உள்ளிட்ட அனைத்தும் செய்தோம் என கூறுகிறார்கள். ஆனால் முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, சுவாமிமலை கோயிலுக்குள் சென்று பார்த்துள்ளாரா? அவர்கள் கடந்த 5 ஆண்டுகளாக மக்களை ஏமாற்றிக்கொண்டிருந்தார்கள்.

தவெக ஆட்சி பொறுப்பேற்றவுடன் அனைத்து கோயில்களுக்கு சென்று அங்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் உள்ளிட்டவைகளை பார்வையிட்டு, சரிசெய்ய வேண்டிய பணிகள் குறித்து ஆலோசித்து அந்தப் பணிகள் மேற்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் விஜய்யின் 5 ஆண்டு கால ஆட்சியில் தமிழகத்தில் உள்ள அனைத்து கோயில்களும் புதுப்பிக்கப்பட்டு, பக்தர்கள் தரிசனம் செய்யும் வகையில் நல்ல சூழ்நிலையை உருவாக்கி தருவோம்" என அமைச்சர் ரமேஷ் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது வேளாண்மைத் துறை அமைச்சர் வினோத் மற்றும் அறநிலையத் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



■ சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வைரவன்பட்டி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடத்தப்பட்ட தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## "அன்பு பெரியோர்களே.. அருமை தாய்மார்களே..": மறைந்த சாலமன் பாப்பையா உடல் இன்று தகனம்

மதுரை, செப்.12-

தமிழறிஞரும், பட்டிமன்ற நடுவருமான சாலமன் பாப்பையா மதுரையில் நேற்று (வெள்ளிகிழமை) காலமானார். அவருக்கு வயது 90.

**தமிழ்த்துறை பேராசிரியர்**

மதுரை திருமங்கலம் அருகே உள்ள சாத்தங்குடியில் 1936ஆம் ஆண்டு சாலமன் பாப்பையா பிறந்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்த்துறை பேராசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

மதுரை அரசடியில் உள்ள ஞானஒளிபுரத்தில் குடும்பத்துடன் வசித்து வந்த சாலமன் பாப்பையா, தனியார் தொலைக்காட்சியின் பட்டிமன்றங்களில் நடுவராகப் பொறுப்பேற்று பேசி வந்தார். அவரது பேச்சுக்குப் பொதுமக்கள் மத்தியில் அதிக வரவேற்பு கிடைத்தது. பட்டிமன்றங்கள் மற்றும் பொது மேடைகளில் நகைச்சுவை கலந்து சாலமன் பாப்பையா பேசி வந்தார். அவரது பேச்சுக்கு கிடைத்த வரவேற்பு காரணமாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் உள்படப் பல நாடுகளில் பட்டிமன்றங்களை நடத்தி வந்தார்.

**வரவேற்பை பெற்ற தீர்ப்புகள்**

தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதையும் மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதையும் சாலமன் பாப்பையா பெற்றுள்ளார். தமிழ் இலக்கியத்தை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் பட்டிமன்றத்தை சாலமன் பாப்பையா நடத்தி வந்தார். பட்டிமன்றங்களில் இரு தரப்பினரும் முன்வைக்கும் கருத்துகளை நகைச்சுவை கலந்து பகுப்பாய்ந்து அவர் அளிக்கும் தீர்ப்புகள் வரவேற்பைப் பெற்றன.



**பத்மஸ்ரீ விருது**

நடுவராக மட்டுமன்றி எழுத்தாளராக 'புறநானூறு புதிய வரிசை வகை', 'பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஒரு பார்வை', 'திருக்குறள் உரையுடன்' என பல்வேறு நூல்களை சாலமன் பாப்பையா எழுதியுள்ளார். தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது, மத்திய அரசின் பத்மஸ்ரீ விருது ஆகியவற்றை சாலமன் பாப்பையா பெற்றுள்ளார். 2010ஆம் ஆண்டு முத்தமிழ்ப் பேரறிஞர் என்ற விருதை அண்ணாமலை பல்கலைக் கழகம் வழங்கியுள்ளது.

இதுதவிர 'பாய்ஸ்', 'சிவாஜி' உள்ளிட்ட திரைப்படங்களிலும் நடித்துள்ளார். சாலமன் பாப்பையா, ஏற்கனவே உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், வயது மூப்பு காரணமாக சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி இன்று காலமானார். சாலமன் பாப்பையா மறைவுக்கு பல்வேறு தரப்பினரும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து வருகிறார்கள்.

**அன்பு பெரியோர்களே..**

முன்னதாக கடந்த 5ஆம் தேதி சிவகாசியில் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் நடத்திய பட்டிமன்றத்தில் பங்கேற்றுப் பேசியுள்ளார். தனது பேச்சை தொடங்கும்போது "அன்பு பெரியோர்களே.. அருமை தாய்மார்களே.." என்று அவர் கூறுவது அனைவரையும் மிகவும் கவர்ந்தது.

இந்நிலையில் சாலமன் பாப்பையாவின் உடல், மதுரை ஆரப்பாளையம் அடுத்துள்ள ஞானஒளிபுரம் பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் பொதுமக்கள் மற்றும் தலைவர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று பிற்பகல் மதுரை தத்தனேரி மின் மயானத்தில் அவரது உடல் தகனம் செய்யப்பட இருப்பதாக உறவினர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அஜித்குமார் கொலை வழக்கு : டிஎஸ்பி உட்பட 4 பேர் சிறையில் அடைப்பு

மதுரை: செப்.12-

சிவகங்கை மாவட்டம், மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவில் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கில், டி.எஸ்.பி., உள்ளிட்ட நான்கு போலீசாரை காவலில் வைக்க, மதுரை நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த கோவிலுக்கு வந்த பேராசிரியை நிகிதா காரிலிருந்த நகை திருடுபோனதாக திருப்புவனம் போலீசில் புகார் செய்தார். இது தொடர்பாக, அஜித்குமாரை, 2025 ஜூன் 27ல் தனிப்படை போலீசார் தாக்கியதில் அவர் இறந்தார். சி.பி.ஐ.,விசாரிக்கிறது.

போலீஸ்காரர்கள் ராஜா, ஆனந்த், சங்கரமணிகண்டன், பிரபு, கண்ணன், போலீஸ் வேன் டிரைவர் ராமச்சந்திரன் கைதாகி, மதுரை மத்திய சிறையில் உள்ளனர். மானாமதுரை டி.எஸ்.பி., சண்முகசுந்தரம், திருப்புவனம் இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார், சிறப்பு எஸ்.ஐ., சிவக்குமார், ஏட்டு இளையராஜா கூடுதல் எதிரிகளாக சி.பி.ஐ., தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்பட்டனர்.

மதுரை 5வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில், நீதிபதி கே. தாமோதரன் நேற்று விசாரித்தார். ராஜா உள்ளிட்ட 10 பேரும் ஆஜராகினர். அவர்கள் மீது கொலை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.




சி.பி.ஐ., தரப்பு வழக்கறிஞர் விஜயன் வாதம்: சண்முகசுந்தரம் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். ரமேஷ்குமார் தற்போது மானாமதுரை இன்ஸ்பெக்டர். சிவகுமார், இளையராஜா சிவகங்கை டவுன் போலீசில் பணிபுரிகின்றனர்.

சண்முகசுந்தரம் உள்ளிட்ட நான்கு பேரையும் காவலில் எடுக்காமல் நியாயமான, சுதந்திரமான விசாரணையை உறுதி செய்ய முடியாது. வழக்கு முடிவடையும் வரை அவர்களை நீதிமன்ற காவலில் வைக்க வேண்டும். இல்லையெனில் அவர்கள் சாட்சிகளை கலைக்கக்கூடும். ஆதாரங்களை அழிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு வாதிட்டார்.

**குற்றச்சாட்டு**

நீதிபதி பிறப்பித்த உத்தரவு: சண்முகசுந்தரம், தனிப்படையை சட்டவிரோதமாக அமைத்துள்ளார். அவர்கள், அஜித்குமாரை சட்டவிரோதமாக காவலில் எடுப்பதற்கு ரமேஷ்குமார், சிவகுமார், இளையராஜா உதவி செய்துள்ளனர்.

அஜித்குமார் இறந்த பின், அவர் போலீஸ் காவலில் இருந்து தப்பிச் செல்ல முயன்றபோது காயமடைந்ததில் இறந்ததாகக்கூறி, பொய் புகாரை கண்ணன் அளித்ததாக, சி.பி.ஐ., தரப்பு குற்றம் சாட்டியுள்ளது. கொலையை மறைக்கும் நோக்கில் பொய் வழக்கு பதிவு செய்ததாக, ரமேஷ்குமார் மீது குற்றச்சாட்டு உள்ளது.

சிவகுமார், இளையராஜா, திருப்புவனம் போலீசில் பொது நாட்குறிப்பு பதிவுகளை திருத்தியதாகவும், நிகிதா புகாரில், சிவகுமார் முன் தேதியிட்டு சி.எஸ்.ஆர்., பதிவை போலியாக உருவாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சண்முகசுந்தரம் உள்ளிட்ட நான்கு பேரும் குற்றம் நடந்ததை மறைக்கும் நோக்கில், ஏற்கனவே ஆவணங்களில் பொய் பதிவுகளை உருவாக்க முயன்றுள்ளனர்.

அஜித்குமார் பெற்றோரிடம், உள்ளூர் அரசியல் கட்சியை சேர்ந்தவர்கள் உதவியுடன் டி.எஸ்.பி., சமரசம் ஏற்படுத்த முயன்றதாக சி.பி.ஐ., குற்றம் சாட்டியுள்ளது.

தங்கள் மொபைல் போன்களில் ஆதாரங்களை, 10 பேரும் அழித்துவிட்டதாக குற்றச்சாட்டு உள்ளது. சண்முகசுந்தரம், ரமேஷ்குமார், சிவகுமார், இளையராஜா சார்பில் இதுவரை ஜாமின் மனு தாக்கல் செய்யப்படவில்லை. இவர்கள் வெளியே இருந்தால் சாட்சிகள் மீது செல்வாக்கு செலுத்தவும், ஆதாரங்களை சீர்குலைக்கவும் வாய்ப்புள்ளது.

சண்முகசுந்தரம், ரமேஷ்குமார், சிவகுமார், இளையராஜாவை செப்., 16 வரை நீதிமன்ற காவலில் வைக்க வேண்டும். இவ்வாறு உத்தரவிட்டார். அனைவரும் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

# அரசமரக் கிளையில் விநாயகர் தும்பிக்கை போன்ற உருவம் : காவேரிப்பட்டினத்தில் பொதுமக்கள் பக்தியுடன் வழிபாடு





கிருஷ்ணகிரி, செப்.11–

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் புதிய வீட்டு வசதி வாரியம் எதிரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில், கும்பாபிஷேகத்தை முன்னிட்டு புதிதாக புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோயில் வளாகத்திற்கு எதிரே நீண்ட காலமாக வளர்ந்து நிற்கும் அரசமரத்தின் கிளைகள், பொதுமக்கள் மற்றும் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து அரசமரத்தின் சில கிளைகளை வெட்டும் பணி நடைபெற்றது.

அப்போது அரசமரத்தின் ஒரு கிளையை வெட்டியபோது, அதன் ஒரு பகுதியில் விநாயகரின் தும்பிக்கை போன்ற உருவம் சுயம்பு வலம்புரி விநாயகராக இருப்பது தெரியவந்தது. இதனை அங்கு இருந்த பெண்கள் மற்றும் பொதுமக்கள் பார்த்து ஆச்சரியமடைந்தனர்.

விநாயகரின் தும்பிக்கை போன்ற அந்த இயற்கையான உருவத்தை பொதுமக்கள் பக்தியுடன் பார்த்ததுடன், அதனை சுயம்பு விநாயகரின் திருவுருவமாக கருதி வழிபடத் தொடங்கினர். தொடர்ந்து அந்த உருவத்திற்கு மஞ்சள் பூசி, மலர் வைத்து தினமும் வழிபாடு செய்து வருகின்றனர்.

இந்த தகவல் அப்பகுதியில் பரவியதை தொடர்ந்து, காவேரிப்பட்டினம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் ஆர்வத்துடன் வந்து அரசமரக் கிளையில் தோன்றியதாக கூறப்படும் விநாயகர் உருவத்தை பார்த்து செல்கின்றனர். குறிப்பாக பெண்கள் மஞ்சள் பூசி, மலர் சாத்தி வழிபட்டு வருகின்றனர்.

ஒருபுறம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலின் கும்பாபிஷேகத்திற்கான புனரமைப்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், மறுபுறம் கோயில் எதிரே உள்ள அரசமரக் கிளையில் விநாயகரின் தும்பிக்கை போன்ற உருவம் தென்பட்ட சம்பவம் பக்தர்களிடையே பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இயற்கையாக உருவான இந்த அமைப்பை பக்தர்கள் தெய்வீக அடையாளமாக கருதி வழிபட்டு வருவது அப்பகுதியில் தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.



# பொன்னேரியில் கட்டுமான அமைப்பு சாரா தொழிற்சங்க நிர்வாகிகள் சிறப்பு ஆலோசனைக் கூட்டம்

திருவள்ளூர், செப்.12–

பொன்னேரியில் அன்னைபாரதம் கட்டுமான அமைப்புசாரா தொழிலாளர் சங்கம் சார்பில் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் மாநில ஒருங்கிணைப்பாளர் பி.வி. சங்கர் ராஜா தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு மாநிலத்தலைவர் எழில்சம்பத் பொதுச் செயலாளர் வி.சி. கதிரவன், மாநில பொருளாளர் ஐ.விஜயராகவன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்கள்

இந்த நிகழ்ச்சியில் மாநில செயற்குழு உறுப்பினர்கள் ரங்கராஜன்மாவட்டத் தலைவர் பி சரவணன் ஒருங்கிணைப்பாளர் சீனிவாசன் இணைச்செயலாளர் மகபூபாஷா முன்னில வங்கித்தனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் ஊத்துக்கோட்டை பேரூர் செயலாளர் சம்பத், நாகலாபுரம் செயலாளர் சுரேஷ், பொன்னேரி பேரூர் தலைவர் சத்யா, செயலாளர் முனுசாமி, பொருளாளர் சரண் சீனிவாசராஜா, மீஞ்சூர் ஒன்றிய செயலாளர் டில்லிபாபு,பேரூர் நரேஷ், நிஷாந்த்மௌலாலா அனுப்பம்பட்டு விஜயகாந்த் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் டி.ஜி.ஐ கிராண்ட் ப்ரோடினோ, (TGI GRAND FORTUNA) கூட்டரங்கில், சிஐஐ பவுண்டேஷன், இந்திய தொழில் துறை கூட்டமைப்பு சார்பாக தொழில் முனைவோருக்கான வணிக உருமாற்றம் திட்ட கருத்தரங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் குமார் நேற்று (10.09.2026) துவக்கி வைத்து பயிற்சியில் கலந்துக்கொண்டவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். உடன் ஓசூர் இந்திய தொழில் துறை கூட்டமைப்பு துணை தலைவர் முனைவர் ஜி. மதியழகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.




# ஜாதிவாரி கணக்கெடுப்பில் குழப்பத்தை ஏற்படுத்தும் பாஜக அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

தேனி, செப்.13–

தேனி மாவட்ட திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!ஜாதிவாரி கணக்கெடுப்பில் குழப்பத்தை ஏற்படுத்தி, சமூகநீதிக்கு எதிராக செயல்படும் பாஜக ஒன்றிய அரசைக் கண்டித்து, தேனி மாவட்ட திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் சுருளிராசு வரவேற்புரைஆற்றினார். மாவட்டச் செயலாளர் பூ. மணிகண்டன் தலைமை வகித்தார்.முன்னிலை:

ஆ. மோகன் பகுத்தறிவாளர் கழக செயலாளர் லோ. முத்துசாமி. மாவட்ட துணைச் செயலாளர்கண்டன உரை:செ. கண்ணன் திராவிடர் கழக பேச்சாளர் கலந்து கொண்ட தோழமைஅமைப்புகளின் நிர்வாகிகள்அபூபக்கர் சித்திக்.SDPI மாவட்டத் தலைவர்போடி முகமது ஆரிப்நீலக் கணலன். ஆதித்தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர்தோழர் வீ.பெ. சுரேஷ்.செய்தித் தொடர்புத் துறை, ஆதித்தமிழர் பேரவைகிருஷ்ணமூர்த்தி. புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர்தோழர் அருந்தமிழரசு. புரட்சித் தமிழர் கட்சி மாநில அமை ப்பாளர் சின்னமுத்து. மாவட்டச் செயலாளர்மணிகண்டன். மாநிலப் பொருளாளர் ம. ஈஸ்வரன். திராவிடத் தமிழர் கட்சி மாவட்டச் செயலாளர்தோழர் தருண் உள்ளிட்ட ஏராளமான தோழமை இயக்கங்களைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களைஎழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி தலைவர், நன்றி கூறினார். சமூகநீதி. சமத்துவம். இடஒதுக்கீடு காக்க தொடர்ந்து குரல் கொடுப்போம்!

ஜாதிவாரிகணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்!

சமூகநீதிக்கு எதிரான நடவடிக்கைகளை முறியடிப்போம்!

# பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் வங்கதேச பிரதமர் பங்கேற்கமாட்டார்: அழைப்பு இல்லை என அமைச்சர் தகவல்



புதுடெல்லி, செப்.13–

டெல்லியில் செப்டம்பர் 12, 13–ல் நடக்கும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்கு வங்கதேச பிரதமருக்குத் தனிப்பட்ட முறையில் அழைப்பு வரவில்லை.

பிம்ஸ்டெக் அமைப்பின் தலைவராகவே அவருக்கு அழைப்பு வந்துள்ளது என்று வங்கதேச வெளியுறவு அமைச்சர் ஹுமாயூன் கபீர் கூறியுள்ளார். இதனால், பிரதமர் தாரிக் ரஹ்மான் இம்மாநாட்டில் பங்கேற்க மாட்டார் என்றும், அவருக்குப் பதிலாக வேறொரு அரசு பிரதிநிதி கலந்துகொள்ள வாய்ப்புள்ளதாகவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

“நமது பிரதமருக்கு நேரடி அழைப்பில்லை. மேலும், அவரது முதல் இந்தியப் பயணம் ஒரு பன்னாட்டு மாநாடாக இருக்க முடியாது. தகுந்த சூழல் அமையும் போது இருதரப்புப் பயணம் மேற்கொள்ளப்படும்” என்று கபீர் கூறினார்.

கடந்த 2024 ஆகஸ்டில் வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு இந்தியா அரசியல் தஞ்சம் அளித்ததால் இரு நாடு களுக்கு மிடையே பதற்றம் நிலவி வருகிறது. இருப்பினும், பிம்ஸ்டெக் தலைவராக பிரிக்ஸ் சிறப்பு அழைப்பாளர்கள் கூட்டத்துக்கு ரஹ்மானுக்கு அழைப்பு அனுப்பப்பட்டதாக இந்தியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





■ சென்னை மாநிலக் கல்லூரியில் “போதைப்பொருள்கள் இல்லாத தமிழ்நாடு” மாநில அளவிலான உறுதிமொழி நிகழ்ச்சி நடைபெற்றது. முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பாக செயல்பட்ட பள்ளி, கல்லூரிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் மூன்றாம் பரிசு பெற்றனர். தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் மாணவர்களுக்கு மூன்றாம் பரிசை வழங்கினார்.




# அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழா : மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கிய ஆணையர் பொன்னையா, ஐ.ஏ.எஸ். பட்டதாரிகளுக்குப் பட்டங்கள் வழங்கினார்

சென்னை, செப்.12–

சென்னை, அண்ணா நகரில் உள்ள பஞ்சாப் அசோசியேஷனின் அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரியின் 38–வது பட்டமளிப்பு விழா, 2026–ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றது. கல்லூரி கல்வி இயக்ககத்தின் ஆணையின் ஆணையர் திரு. பொன்னையா ஐ.ஏ.எஸ் இவ்விழாவி ற்குத் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் டாக்டர் மீனா குமாரி அவர்கள் ஆண்டு அறிக்கையைச் வாசித்தார்.

அதனைத் தொடர்ந்து பட்டதாரிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

பட்டமளிப்பு விழா உரையாற்றிய திரு. பொன்னையா, ஐ.ஏ.எஸ்., நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் மகளிர் அதிகாரமளித்தல் எவ்வளவு முக்கியம் என்பதையும், தொழில் பங்கேற்பு மற்றும் பொருளாதாரச் சுதந்திரம் ஆகியவற்றில் படித்த பெண்கள் அடைந்துள்ள சாதனைகள் குறித்தும் வலியுறுத்திக் கூறினார்.

சிறப்பிடம் பெற்றவர்களுக்கான பதக்கங்களையும் பட்டச் சான்றிதழ்களையும் சிறப்பு விருந்தினர் வழங்கினார். இவ்விழாவில், பல்கலைக்கழக அளவில் சிறப்பி டம் பெற்ற 87 மாணவிகள் மற்றும் மொத்தம் 1950 மாணவி களுக்குப் பதக்கங்களும் பட்டச் சான்றிதழ்களும் வழங்க ப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பஞ்சாப் அசோசியேஷன் நிர்வாகக் குழு உறுப்பினர்கள், கல்லூரி முதல்வர், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் பட்டதாரிகளின் பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தேனி மாவட்டம் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் தொடர்பான முன்னோட்டப் பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் .ம.கோவிந்தராவ்,நேரில் பார்வையிட்டு ஆய்வு



அல்லிநகரம், செப்.12–

தேனி மாவட்டம் தேனி – அல்லிநகரம் நகராட்சி சமுதாய சமையல் கூடத்தில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் தொடர்பான முன்னோட்டப் பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர். ம.கோவிந்தராவ்,மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதனைத்தொடர்ந்து, தேனி ஊராட்சி ஒன்றியம் கொடுவிலார்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் தொடர்பான முன்னோட்டப் பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர். நேரில் பார்வையிட்டு, மாணவர்களுக்கு வழங்கப்பட்ட காலை உணவின் தரத்தினை சாப்பிட்டு பார்த்து ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் , தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி களில் 6–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் பயனடை ந்திடும் வகையில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் என அறிவித்தார்கள்.

அடினடிப்படையில், இத்திட்டத்திம் விரிவாக்கம் செய்வதன் மூலமாக தேனி மாவட்டத்தில் ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 168 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 13363 மாணவ, மாணவியர்களும், பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள 50 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 4636 மாணவ, மாணவியர்களும், நகராட்சிப் பகுதிகளில் உள்ள உள்ள 85 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 12057 மாணவ, மாணவியர்களும் என மொத்தம் 303 பள்ளிகளில் பயிலும் 30,056 மாணவர்கள் பயனடைவார்கள்.

அதுமட்டுமல்லாமல், முதலாம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 392 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 17392 மாணவ, மாணவியர்களும், பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள 96 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 5615 மாணவ, மாணவியர்களும், நகராட்சிப் பகுதிகளில் உள்ள 131 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 14646 மாணவ, மாணவியர்களும் என மொத்தம் 619 பள்ளிகளில் பயிலும் 37,653 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின்கீழ், நகர்ப்புற பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக ளுக்கு சமுதாய சமையல் கூடங்களிலி ருந்து காலை உணவு சமைத்து வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. அதுபோன்று, ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மூலமாக காலை உணவு சமைத்து பரிமாறப்படுகிறது.

மேலும், காலை உணவு சமைக்கக்கூடிய இடங்களை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, அங்கு பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பி னர்களுடன் கலந்துரையாடி, சமைப்பதற்குத்தேவையான அத்தியாவசியப் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் எரிவாயு உருளைகள் தேவைகேற்ப உள்ளதா என கேட்டறிந்ததுடன், காலை உணவினை தரமான முறையில் சமைத்து உரிய நேரத்திற்குள் மாணவர்களுக்கு வழங்குவதை தொடர்ந்து உறுதி செய்ய வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர்.ம.கோவிந்தராவ், அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, பெரியகுளம் சார் ஆட்சியர்.தேவ்லேந்து, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்).வீராச்சாமி , தேனி–அல்லிநகரம் நகராட்சி செயற்பொறியாளர். திலீப்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(சத்துணவு). சுப்புராம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.




# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பை போட்டிகள்

கிருஷ்ணகிரி, செப்.12–

கிருஷ்ணகிரி மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளின் இரண்டாம் நாளில் 1,937 பேர் பங்கேற்றனர். தடகளம், கபடி, இறகுப்பந்து, கேரம், சதுரங்கம், ஹாக்கி, கால்பந்து, சிலம்பம், நீச்சல் உள்ளிட்ட போட்டிகள் பல்வேறு மையங்களில் நடைபெற்றன.

பள்ளி மாணவ மாணவியர் மற்றும் அரசு ஊழியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

போட்டிகளுக்கான ஏற்பாடுகளை மாவட்ட விளையாட்டு அலுவலர் (பொ) நடராஜ முருகன் செய்து வருகிறார்.

# கிருட்டினகிரியில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஜாதிவாரிக் கணக்கெடுப்பை நீக்கிட சூழ்ச்சி செய்யும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து மாவட்ட தி.க.சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்ட தலைநகரிலும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஜாதிவாரி கணக்கெடுப்பை நீக்கிட சூழ்ச்சி.

மக்கள் தொகையில் 100–க்கு 65 விழுக்காட்டிற்குமேல் உள்ள பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீட்டை ஒழித்துக்கட்ட ஒரு பெரும் சூழ்ச்சி திட்டத்தை மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் மூலம் “சட்டரீதியாகச்” செய்ய ஒன்றிய பாஜக அரசு முனைப்பு காட்டிவருவதைக் கண்டித்தும்,

நீதிமன்றம் கேட்கும் கணக்கை எடுத்துக்கொடுக்காமல் குழப்புவது ஏன்? பிற்படுத்தப்பட்டோர் கணக்கெடுப்பில் குழப்பம் ஏற்படுத்தத் துடிப்பது ஏன்? என்பதை விளக்கியும்




கிருட்டினகிரி மாவட்ட திராவிடர் கழகம் சார்பில் கிருட்டினகிரி புதிய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் செ.பொன்முடி தலைமை வகித்தார்.

மாவட்ட துணைச் செயலாளர் சி.சீனிவாசன் அனைவரையும் வரவேற்றார்.

மாவட்ட துணைத் தலைவர் வ. ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முருகேசன், இல. ஆறுமுகம், மாவட்ட இளைஞரணி தலைவர் சீனிமுத்து. இராஜேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கிருட்டினகிரி மாவட்ட திராவிடர் கழகத்தலைவர் கோ. திராவிடமணி ஆர்ப்பாட்ட கண்டன உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் மேனாள் மாவட்டத் தலைவர் பெ.மதிமணியன், மேனாள் மாவட்டச் செயலாளர் கா.மாணிக்கம், மாவட்ட மகளிர் பாசறை தலைவர் மா.சிவசக்தி, காவேரிப்பட்டணம் ஒன்றியத் தலைவர் பெ.செல்வம் ஆகியோர் பேசினர்.

ஒன்றியத் தலைவர்கள் கிருட்டினகிரி த.மாது, ஊற்றங்கரை அண்ணா அப்பாசாமி, காவேரிப்பட்டணம் ஒன்றியச் செயலாளர் பெ.செல்வேந்திரன், நகரச் செயலாளர் அ.கோ.இராசா, மாவட்ட மாணவரணி ச அகரன், ஊற்றங்கரை ஒன்றிய இளைஞரணி தலைவர் கோ.சரவணன், பொடார் பு.கனேசன், காவேரிப்பட்டணம் சி.இராசா, மு. இரஞ்த், மு.புகழேந்தி உள்பட கழகத் தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இறுதியில் ஊற்றங்கரை ஒன்றியச்செயலாளர் செ. சிவராஜ் நன்றி கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் தலைமை கழகம் சார்பில் வெளியிட்ட முழக்கங்களை எழுப்பினர்.




■ திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் தொன்போஸ்கோ மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் ஒன்றான கால்பந்து போட்டி தொன்போஸ்கோ மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் ஜெயக்குமாரி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக இந்திய கால்பந்து அணி பயிற்சியாளர் அப்துல், இந்திய கபடி அணியின் பயிற்சியாளர் கவிதா கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றி கால்பந்தாட்ட போட்டியை துவக்கி வைத்தார்கள். பள்ளியின் அருட்தந்தை சகாயராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார், இந்நிகழ்வில் ஜோலார்பேட்டை நகர செயலாளர் அன்பழகன், தலைமை ஆசிரியர் மகாலட்சுமி, உடற்கல்வி ஆசிரியர்கள் அலெக்ஸாண்டர் இயேசுராஜ் பால்ராஜ் சின்னப்பன் நிம்மி மேரி வினோதினி தமிழரசி அன்பரசு மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ‘ரூ.1,200 கோடி கடன் வாங்கி புதிய தலைமைச் செயலகம் கட்ட வேண்டுமா?’ - இபிஎஸ் கேள்வி

சென்னை, செப்.12–

‘மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும், குடியிருப்புகள் மற்றும் பள்ளிகள் நிறைந்துள்ள, போக்குவரத்து நெரிசல் மிகுந்த பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் முயற்சியை தவெக அரசு கைவிட வேண்டும்’ என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டினப்பாக்கம் கடற்கரையை ஒட்டிய சாந்தோம் சாலையில், காலம் காலமாக வசித்து வரும் மீனவர்கள், பொதுமக்களின் குடியிருப்புகள், பள்ளிகள், வாகன போக்குவரத்து நெரிசல் என்று மிகவும் நெருக்கடியான பகுதியாகும்.

இடநெருக்கடி, வாகனப் போக்குவரத்து நெரிசல் இல்லாத இடத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கப்பட வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சியில் இருந்த காலங்களில் எம்ஜிஆரும், ஜெயலலிதாவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

விவசாயிகள் பிரச்சினை, பொதுமக்களின் சமூக நலப் பிரச்சினைகள் இருக்கும் இத்தருணத்தில், கடுமையான நிதி நெருக்கடி, கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் இந்த நிலையில், கடன் வாங்கி ரூ. 1,200 கோடி செலவு செய்து பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தற்போது அவசியமற்றது.

புதிய தலைமைச் செயலகம் கட்ட வேண்டாம் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூறவில்லை. தமிழகத்தின் நிதிநிலை சீரான பின்பு, போக்குவரத்து நெரிசலற்ற, மக்களுக்கு பாதிப்பு இல்லாத இடத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட உத்தேசிக்கலாம். தற்போதைய நிலையில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தேவையற்றது. எனவே, இத்திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று தவெக அரசின் முதல்வர் விஜய்யை வலியுறுத்துகிறேன்.’ எனத் தெரிவித்துள்ளார்.

# “இடைத்தேர்தலில் தவெக 100% வெற்றி பெறும்”- செங்கோட்டையன் உறுதி

மயிலாடுதுறை, செப்.12–

“தவெக ஆட்சிக்கு நாட்கள் எண்ணப்படவில்லை திமுகவினருக்கு தான் நாட்கள் எண்ணப்படுகின்றன” என அமைச்சர் செங்கோட்டையன் ஆர்.எஸ்.பாரதிக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

மயிலாடுதுறைக்கு இன்று வருகை தந்த வருவாய் துறை அமைச்சர் கே.ஏ செங்கோட்டையன், தவெக மாவட்ட அலுவலகத்தில் தினந்தோறும் நடைபெற்று வரும் விலையில்லா உணவு வழங்கும் பணியினை பார்வையிட்டு, ஏழை, எளிய மக்களுக்கு காலை உணவு வழங்கினார். தொடர்ந்து மாவட்ட செயலாளர் கோபிநாத் தலைமையில் மாற்றுக் கட்சியில் இருந்து தவெகவில் இணைந்தவர்களை சால்வை அணிவித்து வரவேற்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் செங்கோட்டையன், “தமிழ்நாட்டில் ஒரு புதிய மாற்றத்தை கொண்டுவர வேண்டும் என்று மக்கள் வாக்களித்து விஜயை முதல்வராக்கி உள்ளனர். விஜய் இருக்கும் வரை அவர்தான் நிரந்தர முதல்வர், ஆர்.எஸ்.பாரதி சொல்வது போல், தவெக ஆட்சிக்கு நாட்கள் எண்ணப்படவில்லை, அவர்களுக்கு (திமுக) தான் நாட்கள் எண்ணப்படுகின்றன.

தமிழக இடைத்தேர்தலில் 100% வெற்றியை பெறுவோம். தமிழ்நாட்டில் தொடர் மின்வெட்டு ஏற்படுவதை தீர்ப்பதற்கு பல்வேறு மின் உற்பத்தியாளர்களிடம் பேசி வருகிறோம். விரைவில் மின்தடை சரி செய்யப்படும். கூட்டணியில் கம்யூனிஸ்ட் கட்சிகள் இணையுமா என்பதை பொறுத்திருந்து பாருங்கள். மேலும் பல கட்சிகள் கூட்டணியில் இணையும்.

2017–ம் ஆண்டு அப்போதைய சபாநாயகர் தனபால் அறையில் சேரை இழுத்து கீழே போட்டு, திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் செய்த அராஜகம் எல்லோருக்கும் தெரியும், முதல்வர் பேச்சை பற்றி எல்லாம் பேச திமுகவுக்கு அருகதை இல்லை” என்று அமைச்சர் கூறினார்.

# பட்டினப்பாக்கம், நீலாங்கரை கடற்கரை பகுதிகளில் விநாயகர் சிலைகளை கரைக்க தடை: தென்மண்டல பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவு



சென்னை, செப்.12–

பட்டினப்பாக்கம், நீலாங்கரை கடற்கரை பகுதிகளில் விநாயகர் சிலைகளை கரைக்க தடைவித்து தென்மண்டல பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவு அளித்துள்ளது. விநாயகர் சிலைகளை மற்ற இடங்களுக்கு அனுப்பி வைப்பது தொடர்பாக அரசு விளக்கம் தர ஆணை. பட்டினப்பாக்கம், நீலாங்கரையின் சுற்றுச்சூழல் முக்கியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துக. வேறு பகுதிக்கு மாற்றுவதில் சட்டம் ஒழுங்கு உள்ளிட்டவற்றை கருத வேண்டியுள்ளது என்று தமிழ்நாடு அரசு தகவல். அறிவிக்கப்படாத நீர்நிலைகளில் சிலைகளை கரைப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடக் கோரி மனு. காசிமேடு, திருவொற்றியூர், எண்ணூர், பட்டினப்பாக்கம், நீலாங்கரை அடையாளம் காணப்பட்டுள்ளது




■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பணம்பெறும் அலுவலர்களுக்கு வருமான வரித்தாக்கல் குறித்த விழிப்புணர்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்,இ.ஆ.ப., தலைமையில் (10.09.2026) அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை வருமான வரித்துறை கூடுதல் ஆணையர் K.S.இளையராஜா,IRS கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். வேலூர் வருமானவரி அலுவலர் சாந்தி, திருப்பத்தூர் மாவட்ட கருவூல அலுவலர் வெங்கடராகவன் ஆகியோர் விளக்கவுரை ஆற்றினர்.

# மாவீரன் இமானுவேல் சேகரனாரின் 69-ஆம் ஆண்டு நினைவு நாள்: தாம்பரத்தில் விசிகவினர் மலர் தூவி மரியாதை

தாம்பரம் செப்.12–

மாவீரன் இமானுவேல் சேகரனாரின் 69–ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் கிருஷ்ணா நகர் பகுதியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.





விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு செங்கல்பட்டு மாவட்டத் தலைவர் சாமுவேல் எபினேசர் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் மாவீரன் இமானுவேல் சேகரனாரின் திருவுருவப் படத்திற்கு மலர்கள் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

தொடர்ந்து, அவரது சமூகப் பணி, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக அவர் ஆற்றிய பங்களிப்பு மற்றும் சமூக நீதிக்காக அவர் மேற்கொண்ட போராட்டங்களை நினைவு கூரும் வகையில் நிர்வாகிகள் மற்றும் கட்சியினர் மரியாதை செலுத்தினர்.

மேலும், சமூகத்தில் சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் சமூக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதன் அவசியம் குறித்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நிர்வாகிகள் பேசினர். மாவீரன் இமானுவேல் சேகரனாரின் தியாகத்தையும், அவரது சமூகநீதிப் பணிகளையும் தொடர்ந்து நினைவுகூர்ந்து, அவரது கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் எனவும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் செல் சேகர், சார்லஸ், ஆதிசாலமன், அமிர்தராஜ், ஆணி அன்பு, ஜெயச்சந்திரன், பூவிழி, டேவிட், யோவான், ராஜன், கணேசன், சேகர், ரமேஷ், மார்ட்டின், சின்னபையன், பெருமாள், ராமானுஜம் உள்ளிட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் நிறைவில், மாவீரன் இமானுவேல் சேகரனாரின் நினைவை போற்றும் வகையில் அனைவரும் மலர் தூவி மரியாதை செலுத்தினர். அவரது தியாகமும், சமூக நீதிக்கான போராட்டமும் என்றும் மக்கள் மனதில் நிலைத்திருக்கும் என கட்சியினர் தெரிவித்தனர்.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் செப்.17 வரை மிதமான மழை வாய்ப்பு

சென்னை, செப்.12–

தமிழகத்தில் இன்று முதல் செப்.17–ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தெற்கு உள் கர்நாடகா முதல் மன்னார் வளைகுடா வரை தமிழக பகுதிகள் வழியாக சுமார் 0.9 கி.மீ உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (செப்.12), நாளை மறுதினமும் (செப்.13) மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

தென் கடலோர தமிழக மாவட்டங்கள், இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் திருச்சி, நாமக்கல், சேலம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

செப்.14–ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தருமபுரி, திருவண்ணாமலை, நாமக்கல், ஈரோடு, சேலம், அரியலூர், திருச்சி, பெரம்பலூர், கடலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

செப்.15–ம் தேதி விழுப்புரம், திருவ ண்ணாமலை, தருமபுரி, சேலம் மற்றும் கோவை மாவ ட்டங்களில் ஓரிரு இடங்க ளில் கனமழை பெய்யக்கூ டும். மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தருமபுரி, திருவண்ணாமலை, நாமக்கல், ஈரோடு, சேலம், அரியலூர், திருச்சி, பெரம்பலூர், கடலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

செப்.16, 17 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். உள் தமிழகத்தில் நாளை (செப்.12) முதல் செப்.15–ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (செப்.12) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மழைப் பொழிவு:

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணி நிலவரப்படி, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ஐசிஎஃப்பில் 6 செ.மீ, சென்னை அயப்பாக்கம், அண்ணா நகர் மேற்கு, புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில் தலா 4 செ.மீ, கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம், பெரம்பலூர் மாவட்டம் வி.களத்தூர், சென்னை கொரட்டூர், ஐஸ் ஹவுஸ், அமைந்தகரை, திருவள்ளூர் மாவட்டம் செம்பரம்பாக்கம், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர், பொன்னமராவதி, புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி, காரையூர் ஆகிய இடங்களில் தலா 3 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

# தொடர் விடுமுறை காரணமாக விமானக் கட்டணம் 4 மடங்கு உயர்வு!

சென்னை, செப்.12–

சென்னையில் இருந்து பல்வேறு நகரங்களுக்கு செல்ல விமானக் கட்டணம் 4 மடங்கு வரை உயர்ந்துள்ளது. விநாயகர் சதுர்த்தி, தொடர் விடுமுறை காரணமாக விமான கட்டணம் பல மடங்கு உயர்ந்ததால் பயணிகள் அவதியடைத்துள்ளனர். குறிப்பாக, சென்னை - பெங்களூருவுக்கு வழக்கமான விமானக் கட்டணம் ரூ.3,001 ஆக இருந்த நிலையில் ரூ.17,993 ஆகவும், சென்னை - மதுரைக்கு வழக்கமான விமானக் கட்டணம் ரூ.5,393 ஆக இருந்த நிலையில் ரூ.19,761 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



# குப்பைகளை எரித்ததால் மரம் முறிந்து விழுந்தது : மானாமதுரை நகராட்சி மீது பொதுமக்கள் குற்றச்சாட்டு



மானாமதுரை, செப்.12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ரயில் நிலையம் எதிரே, சவேரியார்புரம் நுழைவுவாயில் அருகிலுள்ள ரயில்வே குடியிருப்புப் பகுதியில் நகராட்சி ஊழியர்கள் குப்பைகளைத் தீ வைத்து எரித்ததாகக் கூறப்படுகிறது.

தீயின் வெப்பத்தால் அருகிலிருந்த மரம் வலுவிழந்து முறிந்து விழுந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில்லை.

நகராட்சி நிர்வாகத்தின் அலட்சியத்தால் இந்தச் சம்பவம் ஏற்பட்டதாகக் குற்றம்சாட்டிய பொதுமக்கள், குப்பைகளைத் தீ வைத்து எரிப்பதைத் தடுத்து, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## கீழப்பசலையில் அச்சுறுத்தும் பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அகற்றிவிட்டு புதிய தொட்டி அமைக்க கிராம மக்கள் கோரிக்கை

மானாமதுரை, செப்.12-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியத்துக்குட்பட்ட கீழப்பசலை கிராமத்தின் நடுத்தெருவில் 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்த இந்தத் தொட்டி, தற்போது தூண்கள் சிதிலமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகிறது.

தொட்டியின் அருகே குடியிருப்புகள், சாலை, சிவன் கோவில் மற்றும் துணை சுகாதார நிலையம் அமைந்துள்ளன. பொதுமக்கள் அதிகம் நடமாடும் பகுதியில் சேதமடைந்த தொட்டி இருப்பதால், எந்த நேரத்திலும் விபத்து ஏற்படலாம் என கிராம மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

எனவே, பயன்பாடின்றி ஆபத்தான நிலையில் உள்ள தொட்டியை உடனடியாக அகற்றிவிட்டு, அதே பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும் என மாவட்ட நிர்வாகத்துக்கு கிராம மக்கள் சார்பில் கீழப்பசலை கிராமத் தலைவர் ரவி கோரிக்கை விடுத்துள்ளார்.



■ மதுரை மாவட்டம் அரசு இராசாசி மருத்துவமனையில் உள்ள கூட்டரங்கில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியோருடன் மருத்துவமனையில் வழங்கப்பட்டு வரும் மருத்துவச் சேவைகள், நோயாளிகளுக்கான சிகிச்சை மற்றும் மருத்துவமனையின் செயல்பாடுகள் குறித்து மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடன் மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மரு. கோ. க. அருண் ராஜ் விரிவாக ஆலோசனை மேற்கொண்டார். மதுரை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன்,சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா , மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் கோபிசன் அரசு ராஜாஜி மருத்துவமனைமுதல்வர் அருள் சுந்தரேஸ் குமார் ஆகியோர் உடன் உள்ளனர்.



மதுரை மாவட்டம்,அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு நடைபெற உள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, மாநகர காவல் ஆணையாளர் எஸ். ராஜேந்திரன், ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், உடன் உள்ளார்.

## பிறப்புச் சான்றிதழில் குழந்தையின் பெயரை பதிவு செய்ய செப்.26 வரை அவகாசம்

மதுரை, செப்.12-

பிறப்புச் சான்றிதழில் குழந்தையின் பெயர் இடம்பெற்றிருந்தால் மட்டுமே அது முழுமையான சான்றிதழாகும். பெயர் இல்லாத பிறப்புச் சான்றிதழால் குழந்தைகளுக்கு எதிர்காலத்தில் பல்வேறு சிரமங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

பள்ளியில் சேர்க்கை, வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், பாஸ்போர்ட், விசா உள்ளிட்டவற்றைப் பெறுவதற்கும், வயதுக்கான இறுதி ஆதாரமாகவும் பிறப்புச் சான்றிதழ் முக்கியத்துவம் பெறுகிறது.

திருத்தி அமைக்கப்பட்ட தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விதிகள், 2000-ன்படி, 01.01.2000-க்கு முன்பும், அதற்குப் பிறகும் பெயர் குறிப்பிடப்படாமல் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளில், பெயரை பதிவு செய்வதற்கான கால அவகாசம் முடிவடைந்திருந்தாலும், பெயர் பதிவு செய்யாமல் விடுபட்டுள்ள அனைத்து பிறப்பு பதிவுகளுக்கும் 26.09.2026 வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2012-ம் ஆண்டுக்கு முன்னர் பிறந்த குழந்தைகளுக்கும், குழந்தை பிறந்து 15 ஆண்டுகளுக்கு பின்னரும் இனி பெயரை பதிவு செய்ய இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மதுரை மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பதிவான பிறப்புகளில், பிறப்புப் பதிவேட்டில் விடுபட்டுள்ள குழந்தைகளின் பெயர்களை பதிவு செய்ய அரசு வழங்கியுள்ள இந்த வாய்ப்பை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., கேட்டுக்கொண்டுள்ளார்.

## பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

நீலகிரி, செப்.12-

நீலகிரி மாவட்டம் குன்னூர் வட்டம் உலிக்கல் அதிகரட்டி, பேரூராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, மாவட்ட ஆட்சித்தலைவர் , குன்னூர் வட்டம் அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட சேமந்தாடா பகுதியில் அயோத்தி தாஸ் பண்டிதர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் சமுதாய கூடத்தினையும், கொல்லிமலை பழங்குடியினர் காலனி பகுதியில் சமூக பொறுப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.24.60 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் தச்சு மற்றும் மண்பாண்ட தொழில் பட்டறையினையும், அதிகரட்டி மேல் பகுதியில் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.35.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சுமார் 1 இலட்சம் கொள்ளளவு கொண்ட நீர் தேக்கத்தொட்டியிலிருந்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணியினையும், அதிகரட்டி பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் துணை சுகாதார நிலையத்தினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து, அதிகரட்டி பேரூராட்சி அலுவலகத்தில், பராமரிக்கப்படும் பதிவேடுகள், பொதுமக்களுக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், அதிகரட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் ஆய்வு மேற்கொண்டு அங்கு பராமரிக்கப்படும் பதிவேடுகள், வங்கியின் செயல்பாடுகள், பயிர்கடன் குறித்தும், அதிகரட்டி நியாயவி லைக்கடையில் பொருட்களின் இருப்பு, தரம் மற்றும் பராமரிக்கப்படும் பதிவேடுகள் குறித்தும் மற்றும் அதிகரட்டி அங்கன்வாடி மையத்தின் செயல்பாடுகள், குழந்தைகளின் வருகை, குழந்தைகளின் எடை, உயரம் ஆகியவை குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.தொடர்ந்து, குன்னூர் ஊராட்சி ஒன்றியம், எடப்பள்ளி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் குறித்தும், எடப்பள்ளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள், மருந்து களின் இருப்பு மற்றும் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்தும் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.இந்த ஆய்வின் போது, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) குருராஜன், செயல் அலுவலர்கள் பிரதீப்குமார் (அதிகரட்டி), செந்தில்குமார் (உலிக்கல்), ரமேஷ்குமார் (ஜெகதளா), இளநிலை பொறியாளர்கள் சுரேஷ்குமார், வின்சென்ட், குன்னூர் வட்டாட்சியர் செந்தில்குமார், குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சுப்ரமணி உட்பட பலர் உடனிருந்தனர்.





## ஜெயந்திநகர் கிராமம் CSI பள்ளியில் வெலிங்டன் கன்டோன்மென்ட் போர்டு சார்பில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

நீலகிரி, செப்.12-

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் கண்டோன்மென்ட் பகுதிக்கு உட்பட்ட ஜெயந்திநகர் கிராமத்தில் அமைந்துள்ள C.S.I. பள்ளியில், வெலிங்டன் கன்டோன்மென்ட் முதன்மை நிர்வாக அதிகாரி கிண்டியா அறிவுறுத்தலின் படி, சுகாதாரத்துறை சார்பில் திடக்கழிவு மேலாண்மை (SWM) விதிகள் 2026 குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில், பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு திடக்கழிவுகளை முறையாக கையாளுதல், கழிவுகளை உருவாகும் இடத்திலேயே பிரித்துச் சேகரித்தல் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் அவசியம் குறித்து விரிவாக எடுத்துரைக் கப்பட்டது.

குறிப்பாக ஈரக் கழிவு, உலர் கழிவு, சானிட்டரி கழிவு மற்றும் சிறப்பு பராமரிப்பு கழிவு என கழிவுகளை தனித்தனியாக பிரித்து வழங்க வேண்டும் என்றும், வீடுகள் மற்றும் நிறுவனங்களில் இருந்து உருவாகும் கழிவுகளை பொறுப்புடன் கையாள வேண்டும் என்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026-ன் முக்கிய அம்சங்கள், கழிவு உருவாக்குபவர்களின் கடமைகள், கன்டோன்மென்ட் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு மற்றும் அதிக அளவில் கழிவு உருவாக்கும் நிறுவனங்களின் பொறுப்புகள் குறித்தும் வெலிங்டன் கண்டோன்மென்ட் சுகாதார ஆய்வாளர் பழனிசாமி பொது மக்களிடையே மிக சிறப்பாக எடுத்துரைத்து விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் ஜெயந்திநகர், நல்லப்பன் தெரு, அண்ணாநகர், ஆகிய கிராமங்களை சேர்ந்த கிராம நலசங்கத்தினர், பொது மக்கள், சுகாதார துறை ஊழியர்கள், திரளாக கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வெலிங்டன் சுகாதார ஆய்வாளர் பூரணி சிறப்பாக மேற்கொண்டு இருந்தார்.

இறுதியில் நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் ஜெயந்திநகர் கிராம நல சங்கத்தின் பொது செயலாளர் A.S.ராஜ்குமார் நன்றி தெரிவித்தார்.





படப்பை அனைத்து வியாபாரிகள் சங்கம் சார்பில்

## த.வெள்ளையன் அவர்களின் இரண்டாம் ஆண்டுநினைவு நாளைமுன்னிட்டு திருவர் படத்திற்கு மலர் தூவி மரியாதை

படப்பை, செப்.12-

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட படப்பை உள்ள ஆதனஞ்சேரி பிகேஎம் என்டர்பிரைசஸ் அருகில்

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையுடன் இணைக்கபட்ட படப்பை அனைத்து வியாபாரிகள் சங்கம் சார்பில் சுதேசிநாயகன் த.வெள்ளையன் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சி சங்க தலைவர் லயன்.பி.கோதண்டம் தலைமையில், சங்க செயலாளர் கே.ரவிச்சந்திரன், பொருளாளர் ஆர். பிரவீன்குமார் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது இதில் செங்கல்பட்டு மாவட்ட தலைவர் எம்.இம்மானுவேல் ஜெயசீலன், மாவட்ட செயலாளர் டி.உமாபதி, தாம்பரம் மாநகராட்சி அனைத்து வியாபாரிகள் சங்கம் தலைவர் மார்கெட் ஞானபால், துணை செயலாளர் கவின்குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வெள்ளையன் அவர்களின் திருவுரிவ படத்திற்க்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் அனைவரும் இரண்டு நிமிடம் மவுண அஞ்சலி செலுத்தினர். அதனை தொடர்ந்து 200கும் மேற்பட்ட பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் எஸ்.மங்கிலால், வி.பழனி, டி.ஹரிகிருஷ்ணன், ஆர்.மூர்த்தி, எம்.தேவராஜ், ஆர்.லெனின்குமார், ஆர்.சங்கர், எம்.தேவகுமார், ஜி.கலைச்செல்வி, எம்.வினிதா, எல்.சத்தியவதி, கே.முருகன், புதிய சரித்திரம் பத்திரிகை நிறுவனர் ஸ்ரீதரன் மற்றும் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்

## தாம்பரத்தில் வணிகர் சங்கங்களின் முன்னாள் தலைவர் த.வெள்ளையன் அவர்களின் 2-ம் ஆண்டு நினைவு அஞ்சலி முன்னிட்டு திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்



தாம்பரம், செப்.12-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி அனைத்து வியாபாரிகள் சங்கம் சார்பில், வணிகர் சங்கங்களின் முன்னாள் தலைவர் த.வெள்ளையன் அவர்களின் 2-ம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சி சங்க தலைவர் மார்கெட் ஞானபால் தலைமையில், பொருளாளர் ஆல்விஸ் ராபின்சன் முன்னிலையில், சங்க துணைத் தலைவர் கோதண்டன் வரவேப்புரையில் தாம்பரம் மார்க்கெட் சண்முகம் சாலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தெய்வத்திரு த.வெள்ளையன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, அவரது வணிகர் நலப்பணிகள் மற்றும் வியாபாரிகளுக்காக அவர் ஆற்றிய சேவைகளை நினைவுகூர்ந்தனர்.

“சுதேசி நாயகன், வணிகர்களின் ஒரே தலைவர்” என போற்றப்படும் த.வெள்ளையன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகள் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர் திராவிடர் கழகம் மாவட்ட தலைவர் ப.முத்தய்யா கலந்து கொண்டு மரியாதை செலுத்தினார். இதில் சங்க ஆலோசகர் ஏழுமலை, சட்ட ஆலோசகர் நாகராஜ், சங்க துணை செயலாளர்கள் தியாகராஜன், வெங்கடேசன், கவின்குமார், சங்க இணை செயலாளர்கள் மகேந்திரன், ராகவன், சங்க செயற்க்குழு உறுப்பினர்கள் ஜான், தனசேகரன், ஜெய்கணேஷ், முத்தழகன், மகளீர் அணி பாரதிரவி, பத்மா உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## ஓட்டுநர் உரிமம், ஆர்சி சான்றிதழ்களை பொதுமக்களே பதிவிறக்கம் செய்யலாம் என்ற நடைமுறை நாளை முதல் அமல்: தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, செப்.12-

ஓட்டுநர் உரிமம், ஆர்சி சான்றிதழ்களை பொதுமக்களே பதிவிறக்கம் செய்யலாம் என்ற நடைமுறை நாளை முதல் அமலுக்கு வருவதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. அரசு இ- சேவை மையங்களில் கட்டணம் செலுத்தி ஆவணங்கள் நகல் எடுக்கலாம். டிஜிட்டல் நகல்களை ஓராண்டுக்கு இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். டிஜிட்டல் முறையில் வழங்கப்படும் அனைத்து ஆவணங்களிலும் ஒரு QR குறியீடு இடம்பெற்றிருக்கும், அதைப் பயன்படுத்தி அவற்றின் நம்பகத்தன்மையைச் சரிபார்க்கலாம். ஓட்டுநர் உரிமம் ஆர்.சி. முதலமைச்சரின் 110 விதி அறிவிப்பை செயல்படுத்த அரசாணை வெளியீடு

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161